[30th July 1962

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், ரிஜிஸ்தரார் அவர்களுக்கு இது விஷயமாகப் பரிசீலனை செய்து அதன் முடிவைத் தெரிவிக்கும்படி உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: இது சம்பந்தமாக விவரமாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: கூட்டுறவு ஸ்தாபனங்களின் காமன் குட் பண்டிலிருந்து பள்ளிக்கூடங்கள் கட்டுவது போன்ற பொதுக் காரியங்களுக்குக் கொடுக்கலாம். அதில் எந்த விதமான தவறுதலும் இல்லை என்பதைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: கனம் அங்கத்தினர் மாதா கௌடர் சொல்வது சரி.

Medical Colleges

* 702 Q.—Sri A. K. SUBBIAH: Will the Hon. the Minister for Health be pleased to state the steps taken to open a Medical College at Coimbatore by utilizing the Railway Cess Fund?

* 703 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா?

(இ) அப்படியானால், எப்போது?

* 704 Q.—Sri V. SANKARAN: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal to start a Medical College in the Salem district out of the Railway Cess Fund?

* 705 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் மருத்துவக் கல்லூரி நிறுவுவதற்கான திட்டமுண்டா? எப்போது?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM: I am giving a common answer to all the four questions. It is proposed to shift the Kilpauk Medical College, Madras, from its present site which is in a congested area of the City to a suitable place in the mofussal. The suitability of Coimbatore, Salem and Tiruchirappalli for the location of the College will also be considered by the Government before a final choice of the place is made.